ஜனாதிபதி சட்டத்தரணியான ஜனாப். சலீம் மர்சூப் அவர்கள் 1974ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்தார். 1975இல் அரச சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்தார். பல்வேறு தரங்களில் அங்கு சேவையாற்றினார். பல்வேறு வழக்குகளில் ஆரம்ப, மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும், மத்தியஸ்த நடைமுறைகளிலும் அரச சட்டத்தரணியாகக் கடமையாற்றினார். சர்வதேச மகா நாடுகளிலும், இருதரப்பு உடன்படிக்கைகளிலும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். நடைமுறையிலுள்ள சட்டங்களின் திருத்தங்களை முன்மொழிவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுக்களிலும், சபைகளிலும் அங்கத்துவம் வகித்தார். ஜனாதிபதி சட்டத்தரணியாக 1998ஆம் ஆண்டு ஜுலை மாதம் நியமிக்கப்பட்டார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டதாரியான இவர், கல்வியில் காட்டிய திறமைகளுக்காக கேட் முதலியார் எட்மண்ட் பீரிஸ் விருது, சட்டப் புலமைப்பரிசில் என்பனவற்றைப் பெற்றார். நிர்வாகச் சட்டத்திற்கான சட்ட முதுமானிப்பட்டம் 1984இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் இவருக்கு வழங்கப்பட்டது. சர்வதேச வர்த்தகச் சட்டத்தின் சட்டமுதுமானிப்பட்டமும் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள சாண்டியாகோ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டது.

இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் சட்டம், வர்த்தகச் சட்டம் என்பனவற்றைக் கற்பித்துள்ளார். இலங்கைச் சட்டக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும், பரீட்சகருமான இவர், அதற்கும் மேலாக, சட்டப் பின்படிப்பு மாணவர்களுக்கு புலமைச் சொத்துக்கள் சட்டத்தையும் கற்பிக்கின்றார். மதிப்புமிக்க 'Nuffield பொதுநலவாய புலமைப்பரிசு' உட்படப் பல புலமைப்பரிசுகளையும் இவர் பெற்றுள்ளார். சட்டம் சம்பந்தப்பட்ட பல துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இவருக்கு இவை உதவின. அத்துடன், இவர் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆக்கங்களை எழுதிச் சட்டத்துறைக்குப் பெரும் பங்களிப்பு வழங்கியுள்ளார். இந்நூலே புத்தக வடிவில் இவரின் முதல் வெளியீடாகும்.

---

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, முஸ்லிம் பெண்கள் எதிர் நோக்கும் சர்ச்சைக்குரிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான ஒரு அமைப்பாகவே ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இலங்கையில் உள்ள முஸ்லிம் பெண்களின் நிலை தொடர்பில் பங்காற்றுமளவுக்கு இது முன்னேறியுள்ளது. ஆராய்ச்சியும் செயற்பாடும், சட்ட உளவளத்துணை, மனிதவள முன்னேற்றம், வெளியீடுகள் என்பன தொடர்பில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி செயற்பட்டு வருகின்றது. உள்நாட்டு, தேசிய, சர்வதேச மட்டத்திலும், பெண்கள் அமைப்புக்களுடன் இணைந்து, பொது விடயங்கள் தொடர்பிலும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி செயற்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி ஜனாப். சலீம் மர்சூப் அவர்களினால் எழுதப்பட்ட இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும் என்ற இந்நூல், 'முஸ்லிம் சட்டங்களின் கீழ் வாழும் பெண்கள்' எனும் சர்வதேச ஒருமைப்பாட்டு வலையமைப்புடன் இணைந்து முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி, செயற்பாட்டின் ஒரு பாகமாகும். இது 'முஸ்லிம் உலகின் பெண்களும் சட்டமும்' என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் வெளியீடுகளாவன : பேராசிரியர் சாவித்திரி குணசேகரவினால் எழுதப்பட்ட "Muslim Personal Law in Sri Lanka ; Some Aspects of the Law on Family Relations", சூலனி கொடிகாரவினால் எழுதப்பட்ட "Muslim Family Law in Sri Lanka ; Theory, Practice and Issues of Concern to Women" என்பவையாகும்.


முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி
21/25 பொல்ஹேன்கொட கார்டன்ஸ்
கொழும்பு 05, இலங்கை

ISBN 978-955-625-032-9

Printed by Karunaratne & Sons (Pvt) Ltd.



இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்




SJ 008695



Rs: 350/=


# இலங்கையின் காதி நீதிமன்ற முறைமையும் முஸ்லிம் பெண்கள் மீதான அதன் தாக்கமும்



27

...tion by the Magistrate is adopted and is made an order of this Court.
...ach the age when he would be emancipated ; he is old enough to have
...er of his own free will and he should not be restrained from exercising

*Application refused.*

Present : **Herat, J.**

A. L. M. ISMAIL – *Appellent* and A. A. MUTHU
MARLIYA – *Respondent.*

S. C. 476/63–M. C. *Kalutara*, 7728

...*tenance–Muslim Marriage and Divorce Act, (Cap. 115)–Claim for maintenance under Section 47–Exclusive jurisdiction conferred by Section 48 on Quazi–Invalidity of appointment of Quazi under Section 12 (1)–Constitution Order in Council, s. 55–Lack of jurisdiction of a Magistrate's Court to hear such claims under Maintenance Ordinance (Cap. 91).*

A Magistrate's Court has no jurisdiction to hear under the Maintenance Ordinance (Cap. 91) a claim for maintenance which, by virtue of the provisions of section 48 of the Muslim Marriage and Divorce Act, falls under the exclusive juridiction of a validly appointed Quazi. In such a case, the fact that Section 12 (1) of the Muslim Marriage and Divorce Act is *ultra vires* as being in conflict with Section 55 of the Constitution Order in Council and, therefore, the persons appointed as Quazis by the Minister were not validly appointed is not material.

APPEAL from a judgment of the Magistrate's Court, Kalutara.

*Izadeen Mohamed*, with *M. T. M. Sivardeen*, for the Defendant-Appellant.

*D. J. Tampoe*, with *R. Manikkavasagar*, for the Applicant-Respondent.

*Cur. adv. vult.*

எழுதியவர்

**சலீம் மர்சூப்**


முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி /
முஸ்லிம் சட்டத்தின் கீழ் வாழும் பெண்கள்

2001